செ.வெ.எண்:371/2009(செமதொஅ) நாள். 30.10.2009

**ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக புதிய கட்டத்திற்கு மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், திருபெரும்புதூர் நாடாளு மன்ற உறுப்பினர் ஆகியோர் அடிக்கல் நாட்டினார்கள்.**

காஞ்சிபுரம் மாவட்டம், திருபெரும்புதூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.ஆர்.பாலு, மாவட்ட ஆட்சித்தலைவர் சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.இரா.ஆனந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டு 1.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டினார்கள். ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.வனமயில் மாணிக்கம் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். திருபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.டி.யசோதா, மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.த.துரைசாமி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இவ்விழாவில் குன்றத்தூர் ஒன்றியக் குழுத்தலைவர் திரு.மனோகரன், ஒன்றியக்குழுத் துணைத் தலைவர் திரு.எஸ்.ஜே.நிக்கோலஸ், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திரு.வேலு, செயற்பொறியாளர் (கட்டடம்) திரு.ஆ.வே.ராஜேஷ், உதவி செயற்பொறியாளர் திரு.க.பாஸ்கர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.ம.லூ.பிரான்சிஸ் மைக்கேல்,. நா.சுரேஷ் குமார், ஒன்றியப் பொறியாளர் திரு.சே.செல்வி மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
காஞ்சிபுரம்